முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA3 பரீட்சை – 2017 சனவரி

## (AA35) கூட்டிணைப்பு மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate and Personal Taxation)

2017-01-22
பிற்பகல்
[1.45 – 5.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்களின் எண்ணிக்கை: 10
வினாக்களின் எண்ணிக்கை: 09

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும், கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களைப் பாவித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப் பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒவ்வொரு மதிப்பாண்டிற்கும்,

- அவ்வரிமதிப்பாண்டில் இலங்கையில் வதிவுள்ள ஆள் ஒருவரைப் பொறுத்தவரையில் எங்கே இருந்தும் பெறப்படுவனவும், அத்துடன்
- ஏனைய ஒவ்வொரு ஆட்களைப் பொறுத்தவரையில் இலங்கையில் எழுகின்ற அல்லது பெறப்படுகின்றதுமான

அவ்வரி மதிப்பாண்டிற்கான ஒவ்வொரு ஆட்களினதும் இலாபங்கள் மற்றும் வருமானத்தின்மீது பொருத்தமான வரிவீதத்தில் வருமானவரி விதிக்கப்படலாமென உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 2 குறிப்பிடுகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

பின்வரும் பதங்களை **விபரித்தல்**

(a) ஆள்

(b) வரிமதிப்பாண்டு (05 புள்ளிகள்)

## வினா 02

ஆடை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள **வரையறுக்கப்பட்ட சரசி பசன் (தனி) கம்பனி** தற்பொழுது 100 பணியாளர்களைக் கொண்டுள்ளது. நீங்கள், கம்பனியின் சம்பளப்பட்டியல் முறைமையைக் கையாள்வதற்காக அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளீர்கள்.

***நீங்கள் செய்யவேண்டியது,***

உழைக்கும்பொழுது செலுத்துதல் முறைமையை நடைமுறைப்படுத்துவதில் தொழில்கொள்பவரின் (தொழில்தருநரின்) கடப்பாடுகள் ஐந்தினை (5) **குறிப்பிடுதல்** (05 புள்ளிகள்)

## வினா 03

***சுனிமல்*** ஒரு ஓய்வுபெற்ற ஆசிரியராவார். ***சுனிமலின்*** நண்பர்களில் ஒருவரான ***சரத்*** ஒரு நாள் அவரைச் சந்தித்து, தான் 3 மாத காலத்திற்குள் அவுஸ்திரேலியாவுக்கு குடியேறவிருப்பதால் தனது 200 ஏக்கர் தோட்டத்தை 40 மில்லியன் ரூபாவுக்கு கொள்வனவு செய்யுமாறு கேட்டார். ***சுனிமல்*** அதை வாங்குவதற்கு விரும்பியபோதிலும் அவரிடம் போதிய பணம் இருக்கவில்லை. எவ்வாறெனினும், தோட்டத்தின் 70% ஐ சேகரித்த பணத்திற்காக மாற்றுவது என்ற ஒப்பந்தத்துடன் சில எதிர்பார்த்த கொள்வனவாளர்களிடமிருந்து ரூ.30 மில்லியனை ஒருவாறு சேகரித்துக்கொண்டார். இரு மாத காலத்திற்குள் நடவடிக்கை பூரணப்படுத்தப் படும் என்ற ஒப்பந்தத்தின் கீழ் ரூ. 25 மில்லியனை ***சுனிமல்*** முற்பணமாகச் செலுத்தினார். இரண்டு மாத முடிவில் அவர் தோட்டத்தைக் கொள்வனவு செய்ததுடன் ஏற்கனவே சேகரிக்கப்பட்ட பணத்திற்காக அதன் 70% ஐ கொள்வனவாளர்களுக்கு மாற்றிக் கொடுத்தார். **சுனிமலுக்கு** ஆறு மாத காலத்திற்குள் தனக்கு 10 ஏக்கரை வைத்துக்கொண்டு காணி முழுவதையும் விற்பனை செய்யக்கூடியதாக இருந்தது. இந்த நடவடிக்கை மூலம் அவர் ரூ. 5 மில்லியனை தேறிய இலாபமாகப் பெற்றுக்கொண்டார். அவர் இத்தகைய நடவடிக்கையொன்றில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட முதற் சந்தர்ப்பம் இதுவேயாகும். அவர் இந்த இலாபம் வரிக்குட்படாத மூலதன இலாபம் ஒன்றெனக் கருதுகிறார்.

எவ்வாறாயினும், வரிமதிப்பாளர் இவ்விலாபத்தை **வியாபாரம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட இலாபமொன்றாக** எடுத்து அதனையும் உட்படுத்தி வரிமதிப்பீடொன்றை அவருக்கு அனுப்பியிருந்தார்.

***நீங்கள் செய்யவேண்டியது,***

வரிமதிப்பாளர் இந்த முடிவுக்கு ஏன் வந்தார் என்பதை **சுனிமலுக்கு விபரித்தல்**

*(உங்கள் பதிலுக்கு ஆதரவாக "மகாவித்தாரண எதிர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்" என்ற வழக்குச் சட்டத்தை துணையாகக் கொள்ளவும்.)*

(05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட அமரச (தனி) கம்பனி** உள்ளூர்ச் சந்தைக்காக இனிப்புகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு :

| | **ரூபா** |
|---|---|
| விற்பனை [பெறுமதிசேர் வரி (VAT) நீங்கலாக] | 3,500,000 |
| பொதி செய்யும் இயந்திரமொன்றின் விற்பனையிலிருந்தான பெறுவனவுகள் (பெறுமதிசேர் வரி உட்பட) | 166,500 |
| உள்ளூர் கொள்வனவுகளில் செலுத்தப்பட்ட உள்ளீட்டு வரி | 260,000 |
| தொழிற்சாலைக்கான குளிரூட்டி கொள்வனவில் செலுத்தப்பட்ட உள்ளீட்டு வரி | 85,000 |
| காலாண்டுப் பகுதியில் தவணைக் கொடுப்பனவாக செலுத்தப்பட்ட பெ.சே.வ. பின்வருமாறு: | |
| 2016 சனவரி 20 இல் | 12,625 |
| 2016 பெப்ரவரி 20 இல் | 15,000 |
| 2016 மார்ச் 20 இல் | 10,000 |

**நீங்கள் செய்யவேண்டியது,**

**வரை. அமரச (தனி) கம்பனி** 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்குச் செலுத்தவேண்டிய பெ.சே.வரி மீதித் தொகையை **மதிப்பிடுதல்**

*(பிரயோகிக்கத்தக்க பெ.சே.வரி வீதம் 11% எனக் கொள்ளவும்)* (05 புள்ளிகள்)

பகுதி *A* முடிவடைந்தது

# பகுதி B

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**சுமணவீர** 2014/15 ஆம் வரிமதிப்பாண்டிற்கு வருமானவரி செலுத்தவில்லை. அவரால் சமர்ப்பிக்கப்பட்ட வருமான வரித் திரட்டின்படி செலுத்தவேண்டிய தவறுகையிலுள்ள வரித் தொகை ரூ. 1,500,000/- ஆகும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் தவறுகையிலுள்ள வரிகளை அறவிடுவதற்காக எழுத்துமூலமான அறிவித்தல் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது,**

(a) தவறுகையிலுள்ள வரிகளை அறவிடுவதற்காக உள்ள மூன்று (03) வழிமுறைகளை **விபரித்தல்** (06 புள்ளிகள்)

(b) உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் ''அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர்'' ஆக இருக்கக்கூடிய நான்கு (04) ஆட்களைப் **பட்டியற்படுத்துதல்** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட ஜூபிலி பூட்ஸ் (தனி) கம்பனி** உணவுப் பொருட்களை உற்பத்திசெய்தல் மற்றும் வாங்கி விற்றல் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. கம்பனியின் பதிவேடுகளிலிருந்து 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன.

(1) கம்பனியின் விற்பனைப் புரள்வு பின்வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| கம்பனியால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் | 1,250,000 |
| கம்பனியால் உள்ளூரில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் | 3,895,000 |
| | **5,145,000** |

(2) கம்பனி செலுத்திய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) பின்வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள் மீது | 11,250 |
| அலுவலக செலவுகளின் மீது | 6,540 |

(3) 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகச் செலுத்தப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுகளின் தொகை ரூ. 26,000/- ஆகும்.

***நீங்கள் செய்யவேண்டியது,***

(a) 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்குச் செலுத்தவேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் மீதித்தொகையை ***மதிப்பிடுதல்*** (08 புள்ளிகள்)

(b) 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித் திரட்டினைச் சமர்ப்பிப்பதற்கான உரிய திகதியைக் ***குறிப்பிடுதல்*** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

கட்டடக்கலை நிபுணரான **சித்துமினி**யும் பொறியியலாளரான **முத்துமினி**யும் 2015 ஏப்ரல் 01 இல் **சித்துமுத்து பாட்னர்ஸ்** என்ற பெயரில் பங்குடமை ஒன்றை ஆரம்பித்தனர். **சித்துமுத்து பாட்னர்ஸ்** சிறு காணிகளைக் கொள்வனவு செய்து வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப வீடுகளை நிர்மாணித்து வருகிறது. பங்குடமையை உருவாக்கியபொழுது பின்வருவனவற்றிற்கு அவர்கள் உடன்பட்டிருந்தனர்.

- ***சித்துமினி*** மற்றும் ***முத்துமினி*** ஆகியோர் வருடாந்தம் உயர்தொழில் கட்டணமாக முறையே ரூ.4,000,000/- மற்றும் ரூ. 2,000,000/- ஐப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையோராவார்.

- உயர்தொழிற் கட்டணத்திற்கு மேலதிகமாக ***முத்துமினி*** மாதாந்தம் ரூ. 50,000/- ஐச் சம்பளமாகப் பெற உரித்துடையவர்.

**2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் வருமானக் கூற்று**

| விபரம் | | ரூ. '000 | ரூ. '000 |
|---|---|---|---|
| புரள்வு | | | 75,000 |
| விற்பனைக் கிரயம் | | | (50,850) |
| **மொத்த இலாபம்** | | | **24,150** |
| செலவுகள் : | | | |
| சம்பளம் | | 7,200 | |
| உயர்தொழிற் கட்டணம் : | | | |
| **சித்துமினி** | 4,000 | | |
| **முத்துமினி** | 2,000 | 6,000 | |
| பங்காளர் சம்பளம் - **முத்துமினி** | | 600 | |
| அலுவலக வாடகை | | 480 | |
| மின்சாரச் செலவுகள் | | 84 | |
| சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு | | 120 | |
| தொலைபேசிச் செலவுகள் | | 60 | 14,544 |
| **தேறிய இலாபம்** | | | **9,606** |

இவ்வரிமதிப்பாண்டிற்கு சொத்துக்கள் மீது வரித் தேவைக்கான பெறுமானத்தேய்வு விடுதொகை ரூ.180,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது,**

(a) பங்குடமையின் பிரிபடத்தக்க இலாபத்தைக் **கணிப்பிடுதல்** (05 புள்ளிகள்)

(b) பங்குடமை செலுத்தவேண்டிய வருமான வரியினைக் **கணிப்பிடுதல்** (02 புள்ளிகள்)

(c) பங்குடமையிலிருந்து பங்காளர்கள் பெற்றுக்கொள்ளும் இலாபம் மற்றும் ஏனைய வருமானங்களின் பகிர்வுக்கூற்றினைத் **தயாரித்தல்** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி *B* முடிவடைந்தது

# <u>பகுதி C</u>

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட கோல்டன் (தனி) கம்பனி** தோலினாற் செய்யப்பட்ட காலணிகளை உற்பத்தி செய்து உள்நாட்டுச் சந்தையில் விற்பனைசெய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது.

(1) 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சுருக்கிய முற்றடக்க வருமானக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

| | | ரூ. |
|---|---|---|
| புரள்வு | | 172,450,675 |
| விற்பனைச் செலவு | | (102,460,000) |
| **மொத்த இலாபம்** | | **69,990,675** |
| ஏனைய வருமானம் | | 108,000 |
| நிர்வாகச் செலவுகள் | 26,437,000 | |
| விநியோகச் செலவுகள் | 7,450,525 | |
| நிதிச் செலவுகள் | 1,506,000 | (35,393,525) |
| **தேறிய இலாபம்** | | **34,705,150** |

(2) ஏனைய வருமானம் திறைசேரி உண்டியலில் இருந்து பெறப்பட்ட வட்டியாகும்.

(3) நிர்வாகச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.

| | ரூ. |
|---|---|
| பெறுமானத்தேய்வு | 2,625,000 |
| ஓய்வுப் பணிக்கொடை ஏற்பாடு | 834,000 |
| தண்டம் **(குறிப்பு 1)** | 276,000 |
| சட்டக் கட்டணம் **(குறிப்பு 2)** | 50,000 |
| வாடகை **(குறிப்பு 3)** | 1,500,000 |
| நன்கொடை **(குறிப்பு 4)** | 600,000 |

**குறிப்பு <u>1</u>**

வருட காலப்பகுதியில் வருமான வரியை உரிய காலத்தில் செலுத்தத் தவறியமைக்கான தண்டமாக ரூ. 276,000/- செலுத்தவேண்டியேற்பட்டது.

**குறிப்பு <u>2</u>**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் தண்டத்தைக் குறைப்பதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதற்காக வரி ஆலோசகர் ஒருவருக்கு ரூ. 50,000/- செலுத்தப்பட்டது.

**குறிப்பு <u>3</u>**

வருடம் முழுவதும் சேவையிலீடுபட்ட பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) மாதாந்தம் ரூ. 200,000/- சம்பளமாகப் பெற்றதுடன் கம்பனியால் வாடகையின்றி வதிவிடமொன்றும் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. CEO விற்கு வழங்கப்பட்ட வதிவிடத்திற்காக கம்பனியால் வருட வாடகையாக ரூ. 318,000/- செலுத்தப்பட்டதுடன் அது வாடகைச் செலவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு 4**

இடம்பெயர்ந்த முதியோர்களுக்கு நிறுவனரீதியான பராமரிப்பை வழங்குவதற்காக நிறுவப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனமான முதியோர் இல்லத்திற்கு கம்பனியால் ரூ. 600,000/- நன்கொடையாக வழங்கப்பட்டது.

(4) உபசரணைச் செலவுகள் ரூ. 435,000/- விநியோகச் செலவுகளுக்குள் சேர்க்கப்பட்டுள்ளது.

(5) நிதிச் செலவுகளுக்குள் பின்வருவன உள்ளடங்கும் :

| | ரூ. |
|---|---|
| குத்தகை வட்டி | 270,000 |
| மேலதிகப்பற்று வட்டி | 524,000 |

(6) வருட காலப்பகுதியில் ஓய்வுப் பணிக்கொடையாக கொடுப்பனவு எதுவும் செய்யப்படவில்லை.

(7) ஏனைய செலவுகள் அனைத்தும் வரி நோக்கங்களுக்காக அனுமதிக்கத்தக்கவையாகும்.

(8) வருட காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் விபரங்கள் பின்வருமாறு :

| சொத்து | செலவு (ரூ.) |
|---|---|
| தளபாடம் **(குறிப்பு 5)** | 860,000 |
| இயந்திரங்கள் | 7,370,000 |
| கணினிகள் | 435,000 |
| மோட்டார் வாகனங்கள் **(குறிப்பு 6)** | 2,736,000 |
| மோட்டார் வாகனங்கள் – குத்தகை **(குறிப்பு 7)** | 1,800,000 |
| | **13,201,000** |

**குறிப்பு 5**

தளபாடம் CEO வின் வதிவிடத்திற்காக ரூ. 150,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சோபாவை உள்ளடக்கியுள்ளது.

**குறிப்பு 6**

மோட்டார் வாகனங்கள் வியாபாரப் பிரயாணங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ரூ. 2,250,000/- கிரயத்தையுடைய கார் ஒன்றைத் தவிர ஏனையவை நிறைவேற்று அலுவலர் அல்லாத ஊழியர்களால் பயன்படுத்தப்படும் மோட்டார் சைக்கிள்களை உள்ளடக்கும்.

**குறிப்பு 7**

விநியோக வான் ஒன்று 5 வருட காலப்பகுதிக்கு நிதிக்குத்தகை உடன்படிக்கை ஒன்றின் கீழ் 2015 மே 01 ஆந் திகதி பெறப்பட்டது. குத்தகைக்கான மாதாந்தத் தவணைக் கட்டணம் ரூ. 44,000/- ஆவதுடன் இவ்வருடப் பகுதியில் 10 தவணைக் கட்டணங்கள் செலுத்தப்பட்டன.

(9) 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்த சொத்துக்கள் மீது வரி நோக்கங்களுக்காக, பெறுமானத்தேய்வு விடுதொகை பூரணமாகக் கோரப்பட்டுள்ளது.

(10) கம்பனி முன்னைய வரிமதிப்பாண்டிலிருந்து முன்கொண்டுவந்த பொருளாதார சேவைகள் கட்டணம் (ESC) மேலதிகமாகச் செலுத்திய தொகை ரூ. 800,000/- ஆகும்.

***நீங்கள் செய்யவேண்டியது,***

2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்கு பின்வருவனவற்றை **மதிப்பிடுதல்** :

(a) மொத்த நியதிச்சட்ட வருமானம்

(b) வரி மதிக்கத்தக்க வருமானம்

(c) வரிவிதி வருமானம்

(d) செலுத்தவேண்டிய மொத்த வருமான வரி

(e) செலுத்தவேண்டிய மீதி வரி.

**மு.கு.:** ஏதேனும் கிரயங்கள் அனுமதிக்கப்படுவதற்கான அல்லது அனுமதிக்கப்படாமைக்கான காரணங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். (25 புள்ளிகள்)

## வினா 09

வதிவுள்ள தனியாளும் தகைமைபெற்ற மருந்தாளருமான **ஹெட்டிகே** 2013 இல் தனது அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றது முதல் **சுவ சஹன** தனியார் வைத்தியசாலையில் ஊழியராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். 2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்கான (இதன் பின்பு வருடம் எனக் குறிப்பிடப்படும்) **ஹெட்டிகே** தொடர்பான தகவல்கள் பின்வருமாறு :

(1) அரசாங்கத்திலிருந்து பெற்றுக்கொண்ட வருடாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு ரூ. 540,000/-.

(2) **சுவ சஹன** தனியார் வைத்தியசாலையிலிருந்து மாதாந்தம் சம்பளமாக ரூ. 120,000/- பெற்றுக் கொண்டார். மேலும் 2015 டிசெம்பர் மாதத்தில் அவருக்கு ஒரு மாதச் சம்பளம் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்பட்டது.

(3) அடையாளம் காணப்பட்ட வர்த்தகக் குறியீட்டின் கீழ்வரும் மருந்துகளின் ஊக்குவிப்புக்காக வருட காலப்பகுதியில் தரகுப் பணமாக ரூ. 135,000/- அவருக்கு வழங்கப்பட்டது.

(4) வருட காலப்பகுதியில் இரண்டு நாட்களுக்கு இடம்பெறும் வைத்திய மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அவர் பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட்டதுடன் தங்குமிடச் செலவாக நாளாந்தம் 250 US டொலர் வைத்தியசாலையால் வழங்கப்பட்டது. விமானச்சீட்டும் வழங்கப்பட்டதுடன் அதன் கிரயம் ரூ. 75,000/- (US $ 1 = ரூ.142/-).

(5) நுகேகொடையில் பல வருடங்களுக்கு முன் அவரால் கொள்வனவு செய்யப்பட்ட வீட்டில் வசித்துவருகிறார். அவ்வீட்டின் தேறிய ஆண்டுப் பெறுமதி ரூ. 150,000/- ஆகும்.

(6) தனது பெற்றோரிடமிருந்து முதிசமாகப் பெற்றுக்கொண்ட மாத்தறை நகரில் அமைந்துள்ள இன்னொரு வீடு பிரபல விடுதித்தொகுதி ஒன்றுக்கு ரூ. 60,000/- மாதாந்த வாடகைக்கு 2014 ஏப்ரல் 01 இலிருந்து விடப்பட்டுள்ளது. அவ்வீட்டின் சோலைவரி மதிப்பீடு ரூ. 180,000/- ஆவதுடன் சோலைவரி 30% இல் செலுத்தப்பட்டது.

(7) அவருக்கு குருநாகலில் காணி ஒன்று உள்ளது. அவர் **சுவ சஹன தனியார் வைத்தியசாலையில்** தான் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து 2018 இல் ஓய்வுபெற்ற பின்னர் குருநாகலுக்கு தனது இருப்பிடத்தை மாற்ற வேண்டுமென்று திட்டமிட்டுக்கொண்டிருக்கிறார். வருட காலப்பகுதியில் அக்காணியில் ரூ. 650,000/- மொத்தக் கிரயத்தில் 490 சதுர அடி பரப்பளவைக் கொண்ட வீடொன்றினைக் கட்டினார். இவ்வீட்டுக் கட்டுமானப் பணிக்காக மக்கள் வங்கியிலிருந்து வீட்டுக்கடன் ஒன்றைப் பெற்றிருந்தார். அவர் வருட காலப்பகுதியில் ரூ. 27,000/- மற்றும் ரூ.32,000/- ஆகிய தொகைகளை முறையே வட்டியாகவும் மீளச்செலுத்தும் கடன் தொகையாகவும் செலுத்தினார். இவ்வீட்டின் தேறிய ஆண்டுப் பெறுமதி ரூ. 75,000/- ஆகும்.

(8) அவர் 2006 ஆம் ஆண்டு ரூ. 1,400,000/- க்கு கொள்வனவு செய்த தனிப்பட்ட மோட்டார் காரினை விற்பனை செய்தார். அதன் விற்பனை மூலம் பெறப்பட்ட ரூ. 1,600,000/- ஒரு புதிய மோட்டார் கார் கொள்வனவுக்கு பயன்படுத்தப்பட்டது.

(9) வருட காலப்பகுதியில் **ஹெட்டிகே** மக்கள் வங்கியில் வைத்திருந்த ரூ.1,500,000/- பெறுமதியான நிலையான வைப்பிலிருந்து ரூ.105,000/- வட்டியாகப் பெற்றுக்கொண்டார். இவ்வட்டி வருமானத்திலிருந்து வரிகள் எதுவும் வங்கியால் கழிக்கப்படவில்லை.

(10) வருட காலப்பகுதியில் பின்வரும் பங்கிலாபங்கள் பெறப்பட்டன :

| | **ரூ.** |
|---|---|
| பங்கிலாபம் – வரி விலக்கு இலாபங்களிலிருந்து | 36,000 |
| பங்கிலாபம் – வேறு கம்பனிகளிலிருந்து 10% நிறுத்திவைத்தல் வரிக்குட்பட்டுப் பெறப்பட்டவை | 9,000 |
| | **45,000** |

(11) **ஹெட்டிகே** 10 வருடங்களுக்கு முன் தனது மனைவியிடமிருந்து விவாகரத்துப் பெற்றிருந்தார். நீதிமன்றக் கட்டளைப்படி அவரது முன்னைய மனைவிக்கு மாதாந்தம் ரூ. 15,000/- செலுத்தப்படல் வேண்டும். வருட காலப்பகுதியில் ரூ. 180,000/- அவர் செலுத்தியிருந்தார்.

(12) ஆயுள் காப்புறுதித் திட்டமொன்றின் கீழ் வருடாந்தக் கட்டணமாக ரூ. 84,000/- செலுத்தப்பட்டது.

(13) வருடத்திற்காகக் கழிக்கப்பட்ட உ.பொ.செ. (PAYE) வரி ரூ. 55,600/- ஆகும்.

(14) சுய வரிமதிப்பீட்டு அடிப்படையில் வருமான வரியாக ரூ. 10,000/- செலுத்தியிருந்தார்.

மேலே தரப்பட்ட தகவல்களிலிருந்து,

**நீங்கள் செய்யவேண்டியது :**

2015/16 ஆம் வரிமதிப்பாண்டிற்கு **ஹெட்டிகே** அவர்களுக்கு பின்வருவனவற்றை **மதிப்பிடுதல்**

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்தவேண்டிய மொத்த வருமானவரி

(c) செலுத்தவேண்டிய மீதி வரி, அத்துடன்

(d) வரிவிலக்கு வருமானம் ஏதேனும் இருப்பின்

(25 புள்ளிகள்)

பகுதி *C* முடிவடைந்தது

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |